## சுருக்கம்

பள்ளிக் கல்வி – 2020–2021–ஆம் கல்வியாண்டிலிருந்து 6 முதல் 10–ஆம் வகுப்பு வரை அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லாக் காலணிகளுக்கு பதிலாக கால் ஏந்திகள் (Shoes) மற்றும் காலுறைகள் (Socks) வழங்க நிர்வாக அனுமதி வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பள்ளிக் கல்வி (தொக3(1)) துறை**

**அரசாணை (நிலை) எண்.210** — **நாள் 19.11.2019**

திருவள்ளுவர் ஆண்டு–2050
விகாரி வருடம், கார்த்திகை–3
படிக்கப்பட்டவை :–

1. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு நாள் 8.7.2019.
2. பள்ளிக்கல்வி இயக்குரின் கடித ந.க. எண்.34351/ வி2/இ3/2019, நாள் 25.07.2019.
3. தொடக்கக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.23555/கே3/2018, நாள் 26.07.2019.

–*–

**ஆணை:–**

தமிழ்நாடு சட்டமன்ற பேரவை விதி எண்.110–ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கீழ்க்கண்ட அறிவிப்பு வெளியிடப்பட்டது.

> “அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும், மாணவ, மாணவியருக்கு விலையில்லாக் காலணிகள் வழங்கும் திட்டம் இவ்வரசால் 2012–2013–ஆம் கல்வியாண்டு முதல் சிறந்த முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 6 முதல் 10–ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வரும் காலணிகளுக்கு பதிலாக, 2020–21–ஆம் கல்வியாண்டு முதல் ஷு (Shoes) மற்றும் சாக்ஸ் (Socks) 10 கோடியே 2 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவில் வழங்கப்படும். இதனால் 28 இலட்சத்து 64 ஆயிரத்து 885 மாணவ, மாணவியர் பயன் பெறுவர். ”

2. மேற்கண்ட அறிவிப்பினைத் தொடர்ந்து, மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், பள்ளிக்கல்வி இயக்குநர், 2018–2019–ஆம் கல்வியாண்டில் பள்ளிக் கல்வித் துறையின் கீழ் செயல்படும் பள்ளிகளில் 1 முதல் 10–ஆம் வகுப்பு வரை பயிலும் 29,14,715 மாணவ, மாணவியருக்கு விலையில்லாக் காலணிகள் வழங்கப்பட்டு பயன்பெற்றுள்ளனர் என்றும், இதற்கான செலவினம் ரூ.56,36,64,563/– என்றும், தற்போது 2020–2021–ஆம் கல்வியாண்டில் பள்ளிக் கல்வி துறையின் கீழ் இயங்கி வரும் 6 முதல் 10–ஆம் வகுப்பு வரையிலான மாணவ மாணவியரின் எண்ணிக்கை 23,45,116 என்றும், அவர்களுக்கு 2020–2021 –ஆம் கல்வியாண்டு முதல் காலணிகளுக்கு பதிலாக கால் ஏந்திகள் (shoes) மற்றும் இரண்டு ஜோடி எண்ணிக்கையிலான காலுறைகள் (socks) வழங்குவதால் அரசுக்கு ரூ.8,82,32,997/– கூடுதல் செலவினம் ஏற்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், தொடக்கக் கல்வி இயக்குநர், தொடக்கக் கல்வி துறையின் கீழ் செயல்படும் பள்ளிகளில், 2018–2019–ஆம் கல்வியாண்டில் 1 முதல் 8–ம் வகுப்பு வரை பயிலும் 29,48,801 மாணவ, மாணவியருக்கு

விலையில்லாக் காலணிகள் வழங்கப்பட்டு பயன்பெற்றுள்ளனர் என்றும், இதற்கான செலவினம் ரூ.48,56,49,763/– எனவும், இதனைத் தொடர்ந்து 6 முதல் 8–ஆம் வகுப்பு வரை பயிலும் 5,69,599 மாணவ, மாணவியருக்கு 2020 –2021 –ஆம் கல்வியாண்டு முதல் காலணிகளுக்கு பதிலாக கால் ஏந்திகள் (shoes) மற்றும் இரு ஜோடி காலுறைகள் (socks) வழங்குவதால் ஏற்படும் கூடுதல் செலவினம் ரூ.2,08,04,443/– என்றும் தெரிவித்துள்ளார். மேலும், தற்போது கணக்கிடப்பட்டுள்ள உத்தேச மாணவ, மாணவியர் எண்ணிக்கையில் மலைப் பிரதேசங்களில் பயிலும் மாணவ, மாணவியர்களின் எண்ணிக்கையும் சேர்த்து கணக்கிடப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

4. மேற்கண்ட சூழ்நிலையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின் அடிப்படையில், பள்ளிக் கல்வி இயக்குநர் மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநர் ஆகியோரின் கருத்துருக்கள் அரசால் கவனமுடன் ஆய்வு செய்யப்பட்டு, அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 6 முதல் 10–ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வரும் காலணிகளுக்கு பதிலாக, 2020–2021–ஆம் கல்வியாண்டு முதல் கால் ஏந்திகள் மற்றும் காலுறைகள் (Shoes and Socks) வழங்குவதற்கு ஏதுவாக மொத்த செலவினத் தொகை (பள்ளிக் கல்வி இயக்ககம் ரூ.53,85,96,631/– மற்றும் தொடக்கக் கல்வி இயக்ககம் ரூ.12,85,95,685/–)ஆக மொத்தம் ரூ.66,71,92,316/– (ரூபாய் அறுபத்து ஆறு கோடியே, எழுபத்தொரு இலட்சத்து, தொண்ணூற்று இரண்டு ஆயிரத்து, முந்நூற்று பதினாறு மட்டும்) செலவில் வழங்குவதற்கு ஏதுவாக நிர்வாக ஒப்புதல் அளித்து பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு அரசு ஆணையிடுகிறது.

I. இச்செலவினம் "புதுப்பணி" குறித்த செலவினமாக கருதப்பட வேண்டும்.
II. இத்திட்டத்தை செயல்படுத்தும் போது உரிய கொள்முதல் நடைமுறைகளை தவறாது பின்பற்ற வேண்டும்.

5. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.54682/Edn-II/2019, நாள் 19.11.2019–இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பிரதீப் யாதவ்
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை–6.
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை–6.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், சென்னை–6.
திட்ட இயக்குநர், சமக்ர சிக்ஷா, சென்னை–6.
கூடுதல் திட்ட இயக்குநர், சமக்ர சிக்ஷா, சென்னை–6.
மாநிலக் கணக்காயர், சென்னை–18.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–35.

**நகல்**
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதித் (கல்வி.2/வ.செ.(பொ.I)/ (வ.செ.பொ.II)) துறை, சென்னை–9.
✓ முதன்மைச் செயலாளரின் முதுநிலை தனிச் செயலாளர், பள்ளிக் கல்வித் துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

19.11.19